# ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி
## திருச்சிராப்பள்ளி- 5

## பிப்ரவரி மாதத்திய கல்லூரி நிகழ்வுகள்

### ஆரகிள் 11 ஜி கணினித் தொழில் நுட்பம் குறித்த பயிலரங்கம்

*கணினித்துறையின் நவீனநுட்பமாகிய ஆரகிள் 11 ஜி கணினித் தொழில் நுட்பம் குறித்த பயிலரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியில் எதிர்வரும் 02.02.2010 அன்று நடைபெற்றது. புதிய டேடாபேஸ் ஆரகிள் 11ஜி சிறப்பியல்புகள், ஆரகிள் 11ஜி பயன்பாடு, மென்பொருள் உருவாக்கத்தில் ஆரகிளின் நிலை ஆகியவற்றை மையப்படுத்தி இப்பயிலரங்கம் அமைந்தது. இது கணினித்துறையின் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியையும் அவற்றின் பயன்பாட்டையும் விளக்குவதாகவும் அமைந்தது. திருச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள கல்லூரிகளின் கணினித்துறையில் இளநிலை, முதுநிலை படிப்புகளில் இறுதியாண்டு பயிலும் நூறு மாணவ மாணவியர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

### மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்

*ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியும் திருச்சி பெல்மான்ட் மனித வள மையமும் இணைந்து மாபெரும் வேலை வாய்ப்பு முகாமை 05, 06.02.2010 ஆகிய நாட்களில் நடத்தின. இம்முகாமில் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 10,000 மேற்பட்ட பணிநாடுநர்கள் பங்கேற்றனர்.*



பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் கணினி மென்பொருள், அயற்பணி, அலைபேசி, காப்பீடு, முதலீடு, பொறியியல் ஆகிய துறைகள் சார்ந்த 21 முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றன.இம்முகாமில் முன்னணி நிறுவனங்கள் தங்கள் துறைகளுக்கு 1094 பணி நாடுநர்களைத் தேர்வு செய்துள்ளனர்.

## ஹெர்பல் ஃபோகஸ் -2010

மூலிகைகளின் மகத்துவமும் வரலாறும் மிகப் பழமையானது. ஆயுர்வேத மருத்துவ முறை அதர்வண வேதத்தின் உபவேதமாகக் கருதப் படுகிறது. நவீன மருத்துவம் பல நோய்கள் பலவற்றிற்கு செயற்கை மருந்துகளைக் கண்டுபிடித்தாலும் பல நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளுள் சில பக்கவிளைவினை ஏற்படுத்துகின்றன. எனவே, நோய்கள் பலவற்றை பக்கவிளைவின்றிக் குணப்படுத்தவும் உலக அளவிலான பார்வை தற்போது இந்தியாவின் சித்த ஆயுர்வேத மருத்துவத்தின் பக்கம் திரும்பியுள்ளது. உலகளாவிய இத்தகைய மாற்றத்தினால் விவசாயிகள் பயன் பெற வேண்டும். அவர்கள் வாழ்வில் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க வல்லது மூலிகை

விவசாயம். இதற்காகவே எம் கல்லூரி கடந்த ஏழாண்டாக மூலிகைக் கருத்தரங்கை நடத்தி வருகின்றது. இவ்வாண்டு பிப்ரவரி 8 அன்று மூலிகைக் கருத்தரங்கு ஹெர்பல் ஃபோகஸ் -2010 நடைபெற்றது.

விழாவில் தினமலர் இணை ஆசிரியர் முனைவர் ஆர்.ராமசுப்பு குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கிவைத்து தொடக்கவுரையாற்றினார். கல்லூரி நிர்வாகக் குழு - ஸ்ரீரங்கநாத பாதுகா வித்யாலயா டிரஸ்டின் தலைவர் ஸ்ரீ.கே.என்.ஸ்ரீநிவாசன், டாக்டர் விளம்பி என்.ஆர்.கே. ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து மத்திய உயிர்நுட்பவியல் துறையின் முதுநிலை விஞ்ஞானி டாக்டர் ஜி.எம்.லிங்கராஜூ மையக்கருத்துரையாற்றினார்.




விழாவில் கல்லூரிச் செயலர் ஸ்ரீ.என்.கஸ்தூரிரங்கன் தலைமையுரையாற்றினார். கல்லூரி இயக்குநர் முனைவர் கி.பிரேமா கல்லூரி ஊரகப் பகுதி மக்களின் மேம்பாட்டிற்காக மேற்கொண்ட ஆய்வுகள் - பயனாளிகள் குறித்த அறிமுக உரையாற்றினார். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்பிரமணியன் வரவேற்றார். இறுதியாக கல்லூரி துணைமுதல்வர் பேரா.கே.ஸ்ரீதரன் நன்றி கூறினார். தொடக்கவிழாவைத் தொடர்ந்து ஆய்வரங்கத்தில் டாக்டர்

*விளம்பி என்.ஆர்.கே. ரெட்டி தலைமையேற்று கருத்துரையாற்றினார். கட்டுரையாளர்கள் பங்கேற்ற ஆய்வு அமர்வுகள் நடைபெற்றன.*

*மத்திய அரசின் ஆய்வுத் திட்டத்தின் கீழ் பனையபுர விவசாயிகள் சோற்றுக் கற்றாழை பயிரிட்டு கல்லூரிக்கு வழங்கி பொருளீட்டிய விவசாயிகள் 9 பேருக்கு ரூ. 50,000 மதிப்பிலான ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மேலும் விளம்பி என்.ஆர்.கே. ரெட்டி ஆய்வு மையத்துடன் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. இதனால் மூலிகை விவசாய ஆலோசனை வழங்கப்பட உள்ளது.*

*கருத்தரங்கில் மூலிகை வளர்ப்பு, தரம், விற்பனை வாய்ப்பு பற்றிய விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாகத் தகவல் அளிக்கப்பட்டன. செலவில்லா விவசாயம் செய்ய ஜீவாமிருதம், பீஜாம்ருதம், அக்னி அஸ்திரம் (மூலிகை பூச்சி விரட்டி), பிரம்மாஸ்திரம், பஞ்சகவ்யா, ஆட்டுவூட்டம், மீன் அமினோ அமிலம் ஆகியவற்றை தயாரித்தல் பற்றியும் பயன்படுத்துதல் பற்றியும் சோற்றுக் கற்றாழை சாறு எடுக்கும் முறை பற்றியும் நேரடி செயல் விளக்கங்கள் செய்து காட்டப்பட்டன. அரிய பல மூலிகைகளின் கண்காட்சி இடம்பெற்றது. மூலிகை ஆய்வு மையத்தில் உருவாக்கப் பட்ட சோற்றுக் கற்றாழைச் சாறு, மூலிகைப் பூச்சி விரட்டி, முகப்பொலிவு க்ரீம், மூலிகையில் தயாரிக்கப் பட்ட மாத்திரைகள் பற்றிய கண்காட்சியும் நடைபெற்றது.*

*விழா மற்றும் கருத்தரங்க ஏற்பாடுகளைக் நிர்வாகம் சார்பில் புலத்தலைவர் டாக்டர் எஸ்.ராஜன், உயிர் வேதியியல் துறைத் தலைவர் பேரா. ஜெ.ராதிகா, உயிர்நுட்பவியல் துறைத் தலைவர் பேரா. எம்.மீனாக்ஷி சுந்தரம், மூலிகை ஆய்வு மைய ஆலோசகர் திரு.ஏ.வெங்கட சுப்பிரமணியன் மற்றும் உயிர் அறிவியல் துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.*

### *வணிகவியல் வணிக நிர்வாகவியல் துறைகள் சார்பிலான சிறப்புச் சொற்பொழிவுகள்*

*ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியின் வணிகவியல், வணிக நிர்வாகவியல் துறைகள் சார்பிலான சிறப்புச் சொற்பொழிவுகள் 11,12.02.2010 ஆகிய நாட்களில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றன. 11.02.2010 அன்று திருச்சி தேசியக் கல்லூரி வணிகவியல் பேராசிரியர் முனைவர் எஸ்.வி.ஸ்ரீநிவாச வல்லபன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மின்னணு சார் வர்த்தக முறைகள் குறித்து உரையாற்றினார். அவர் தம்முரையில், மின்னணு பணப் பரிமாற்றம். மின்னணு வெளியீடுகள், மின்னணு பதிப்பு முறைகள் முதலிய மின்னணு வர்த்தகச் செயற்பாட்டு முறைகள் குறித்து விளக்கியுரைத்தார்.*



*12.02.2010 அன்று திருச்சி, யோகா செக்யூரிடீஸ் லிட் நிர்வாக இயக்குநர் திரு.என்.ஸ்ரீநிவாசன் பங்குவர்த்தகம் உங்கள் கையில் என்னும் தலைப்பில் உரையாற்றினார். அவர் தம்முரையில், பங்குச்சந்தையின் தோற்றம், வளர்ச்சி, பங்குவர்த்தக முறைகள், இந்தியாவில் அன்னிய முதலீடு, பங்குவர்த்தகத்தைப் பாதிக்கும் காரணிகள், பங்குவர்த்தகத்தை அறிந்து கொள்ள உதவும் படிப்புக்கள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை விளக்கியுரைத்தார். இரு நாட்களும் கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்பிரமணியன் தலைமையுரை ஆற்றினார். வணிக*

*நிர்வாகவியல் துறைத்தலைவரும் துணை முதல்வருமான பேரா.எம்.பிச்சைமணி வரவேற்றார். நிகழ்ச்சியின் இறுதியில் வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் ஓ.டி.வி.லதாஸ்ரீ நன்றி கூறினார்.*

### *இயற்கை விவசாயம் குறித்த பயிலரங்கம்*

*ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியின் இளையோர் எக்ஸ்னோரா, முதுகலைச் சமூகப் பணித்துறை மற்றும் ட்ரஸ்ட்மீ சமூகத் தொண்டு நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் இயற்கை விவசாயம் குறித்த பயிலரங்கம் திருச்சி மாவட்டம் கொணலை கிராமத்தில் 12.02.2010 அன்று நடைபெற்றது. பேரா.சாந்தி கந்தசாமி அவர்கள் இயற்கை விவசாயம் குறித்த உரம் தயாரிப்பு முறைகள், மூலிகைப் பூச்சிக் கொல்லி உருவாக்கம், இயற்கை மருந்து தெளிப்பு பற்றிய செயல்முறை விளக்கம் அளித்தார். முன்னதாக எக்ஸ்னோரா பொறுப்பாளர் பேரா.கே.ராஜபாண்டியன் வரவேற்றார். இறுதியில் பேரா.பி.சுசீந்திரன் நன்றி நவின்றார். இப்பயிலரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

### *யோகாப் பயிற்சி*

*கல்லூரியின் யோகா மையம் இளையோர் மனநல மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இளைஞர் மேம்பாடும் யோகாவும் என்னும் பயிலரங்கம் ஒன்றை 20.02.2010 அன்று நடத்தியது. இப்பயிலரங்கில் சென்னை, சத்யானந்தா யோகா மையத்தின் நிறுவனர் ஸ்ரீ.என்.கே.டி.ஜயகோபால் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு யோக நித்திரை பயிற்சி அளித்தார். இதன்மூலம் மன இறுக்கம் உடல் இறுக்கம் ஆகியவற்றிலிருந்து விடுபட முடியும் என்றும் அயர்ந்த தருணங்களில் இது புத்துணர்ச்சி தரும். இதனால் அவசரயுகத்தில் இளைஞர் சிறப்புற செயலாற்றலாம் என்றும் கூறினார். முன்னதாகக் கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்பிரமணியன் தலைமையேற்றார். விழாவில் கொடையாளர் எம்.பி.ரங்கராஜன், முன்னிலை வகித்தார். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்*

பி.கரிகாலன் வரவேற்றார். விழாவின் இறுதியில் யோகாசிரியர் பெ.விஜயகுமார் நன்றி கூறினார்.

## ஆங்கில இலக்கியச் சிறப்புச் சொற்பொழிவுகள்

ஆங்கிலத்துறையின் சார்பில் இலக்கியச் சிறப்பு அரங்கங்கள் கடந்த 25, 26.02.2010 ஆகிய நாட்களில் நடைபெற்றன. முன்னணிப் படைப்பாளரும் திறனாய்வாளருமான முனைவர் எஸ்.பிரேமா நந்தகுமார் மில்டன் யுகம் என்னும் தலைப்பில் உரையாற்றினார்.



அவர் தம்முரையில் மில்டனின் சம காலத்திய படைப்பாளர்களிடமிருந்து இவர் எவ்வாறு வேறுபடுகின்றார் என்று விளக்கமளித்தார். மேலும் நூல்களின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறினார். முன்னதாக முதல்வர் முனைவர் த.சிவசுப்பிரமணியன் வரவேற்றார். விழாவிற்கு முன்னாள் முதல்வர் முனைவர் த.ஜெயராமன் தலைமையேற்றார். இறுதியில் பேரா.சி.காயத்திரி நன்றி கூறினார்.

## நாட்டு நலப்பணித் திட்டம்

கல்லூரி என்.எஸ்.எஸ். சார்பில் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம், ஹெர்பல்ஃபோகஸ் -2010 ஆகிய நிகழ்வுகளுக்குக் கல்லூரி என்.எஸ்.எஸ். தொண்டர்கள் 50 பேர் பணியாற்றினர். 10.02.2010 அன்று ஸ்ரீரங்கம் ரங்கநாதர்

*திருக்கோவில் உண்டியல் என்னும் பணியில் 30 மாணவத் தொண்டர்கள் பணியாற்றினர்.*

*ஆரோக்கியமான இளைஞர்களை உருவாக்கும் வகையில் என்.எஸ்.எஸ். சார்பில் 26.02.2010 அன்று மனிதனும் இயற்கை மூலிகையும் என்னும் தலைப்பில் நல்வாழ்வு அரங்கம் நடைபெற்றது. விழாவில் கும்பகோணம், ரோகிணி ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தின் நிர்வாகி திரு.ஜி.ரமேஷ் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அவர் தம்முரையில், இயற்கையில் பருவ காலம் மாறும்போதெல்லாம் விளையும் பொருட்கள் அவ்வப் பருவத்தின் தட்பவெப்பத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. மூலிகைகளை பயனுணர்ந்து உணவாக ஏற்கவேண்டும் என்று கூறினார். கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்பிரமணியன் தலைமையேற்றார். நீர்வள அமைப்பின் ஜெயங்கொண்டம் பிரிவு அலுவலர் திரு.க.ராஜ கோபால வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக திட்ட அலுவலரும் துணைமுதல்வருமான பேரா. எம்.பிச்சை மணி வரவேற்றார். விழாவின் இறுதியில் திட்ட அலுவலர் பேரா.வி.பி.டி.தேவிகா நன்றி கூறினார். திருச்சியில் தூயவளனார் கல்லூரியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் அரங்க ஒழுங்கமைப்பில் எம் கல்லூரி மாணவர்கள் ஈடுபட்டனர்.*

***என்.கஸ்தூரிரங்கன்,***
*செயலர் - தாளாளர்*